**<u>Spl.CC.No.80/2019</u>**

**11-03-2022** ஆம் தேதி அன்று சாட்சி **P.W. 54 (**திருமதி**.**சண்முகபிரியா**)** அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**.**

<u>குறுக்கு விசாரணை துவங்கப்பட்ட நேரம் மதியம் **3.00** மணி**.**</u>

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

7.5.2012 ஆம் தேதியில் நான் திரு.பொங்கலூர் பழனிசாமியிடம் விளக்கம் கேட்டு ஒரு கடிதம் அனுப்பியுள்ளேன் என்றால், சரிதான். அந்த கடிதம் Ex.P.113 ஆகும். Ex.P.113-ல் மேற்படி கடிதத்தில் பக்கம் 2 பத்தி 3-ல் 31.3.2010 ஆம் தேதியில் எதிரி பொங்கலூர் பழனிசாமி அவர்கள் வருமானத்திற்கு அதிகமாக சேர்த்த சொத்தாக கணக்கிட்டதில் ரூ.55,01,652.19 வருமானத்திற்கு அதிகமாக சேர்த்த சொத்து என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தொகையை அறுதியாக முடிவு செய்து அதன்பிறகு Ex.P.113 அனுப்பினேனா என்றால் எனது புலன் விசாரணையில் வருமானத்திற்கு அதிகமாக சேர்த்த சொத்ததாக ரூ.55,01,652.19 என கணக்கிட்டுள்ளேன், அது குறித்து தங்களது விளக்கம் என்ன என்றுதான் கேட்டுள்ளேன். அந்த கடிதத்தில் இணைப்பாக மேற்படி கணக்கீட்டு பட்டியல் I முதல் VII ஆவணங்களை இணைத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பட்டியல் I முதல் VII ஆவணங்களில் எதிரி மற்றும் அவரது குடும்பத்தார்களின் சொத்து விவரம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த பட்டியலில் எதிரி குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரின் சொத்துக்கள் குறித்த விவரம் இல்லை என்றால் சரியல்ல. குடும்ப உறுப்பினர்களில் யார் யாரது சொத்துக்கள் பட்டியலில் உள்ளடக்கியுள்ளது என்றால், திரு பொங்கலூர் பழனிசாமி, அவரது மனைவி திருமதி விஜயலட்சுமி, சகோதரர் திரு.அர்ஜுணன் ஆகியோர்களது சொத்துக்களின் விவரம் உள்ளடக்கியுள்ளது. திரு.பொங்கலூர் பழனிசாமியின் குடும்ப உறுப்பினர்களில்

மற்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் அப்பட்டியலில் சொல்லப்படவில்லை என்றால், சொல்லப்படவில்லை. மேற்படி ரூ.55,01,652.19 என்பது திரு.பொங்கலூர் பழனிசாமி, அவரது மனைவி விஜயலட்சுமி, அவரது சகோதரர் அர்ஜுணன் ஆகிய மூவரது சொத்துக்களா என்றால், ஆம். அர்ஜுணன் ஒரு தனி குடும்பம், பொங்கலூர் பழனிசாமி ஒரு தனி குடும்பம் என்றால், சரிதான். பொங்கலூர் பழனிசாமி, அவரது சகோதரர் அர்ஜுணன், அவரது மனைவி விஜயலட்சுமி ஆகிய மூவரில் விஜயலட்சுமியிடமும், அர்ஜுணனிடமும் விளக்கம் கேட்டு Ex.P.113 அறிவிப்பு போன்ற அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால், சரிதான். திரு.பொங்கலூர் பழனிசாமியின் மனைவி விஜயலட்சுமி 2004 ஆம் வருடம் ஒரு சாலை விபத்தில் இறந்து விட்டார். பொங்கலூர் பழனிசாமி மற்றும் அவரது சகோதரர் அர்ஜுணன் இருவரது பெயரிலும் கூட்டாக சொத்து இருந்தது. ஆதலால் அந்த கூட்டுச் சொத்தில் பொங்கலூர் பழனிசாமிக்குரிய விகிதாச்சார பங்கு விதத்தை மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கொண்டேன். ஆதலால் அர்ஜுணனுக்கு Ex.P.113 போன்ற அறிவிப்பு அனுப்பவில்லை. கூட்டுச் சொத்து என நான் சொல்வது சடையாம்பாளையம் கிராமத்தில் ஆவண எண்.3301/1998 தாராபுரம் சார்பதிவகம் என்ற ஆவணத்தின்வழி கண்ட சொத்தாகும். அந்த கூட்டுச் சொத்தின் பரப்பளவு எவ்வளவு என்றால், 4.33 ஏக்கர் பரப்பளவு சொத்தாகும். அந்தச் சொத்தில் திரு.பொங்கலூர் பழனிசாமிக்கு 2.16 ½ ஏக்கர், அர்ஜுணனுக்கு 2.16 ½ ஏக்கர் என சொல்கிறேனா என்றால் அந்த ஆவணத்தைப் பார்த்துத்தான் என்னால் சொல்ல முடியும். அந்த சொத்தின் மதிப்பு ரூ.78,350/- ஆகும்.அதில் ½ பங்கு மதிப்பாக ரூ.39,175/- மட்டுமே எதிரி திரு.பொங்கலூர் பழனிசாமியின் சொத்தாக கணக்கில் எடுத்துக் கொண்டேன். Ex.P.113 ல் இணைப்புப் பட்டியல் I-ல் 26 ஆவது அயிட்டமாக மேற்கண்ட சொத்தை காண்பித்திருக்கிறேன் என்றால் சரிதான். ஆவண எண்.3301/1998 (Ex.P.63) என்பது பரிவர்த்தனைப் பத்திரமாகும். மேற்படி

பரிவர்த்தனை பத்திரப்படி திரு.பொங்கலூர் பழனிசாமி மற்றும் அர்ஜுனன் ஆகியோர்களுக்கு ஏக்கர் 4.33 பரிவர்த்தனை மூலம் வரப்பெற்றுள்ளது என்றால் சரிதான். அந்த பரிவர்த்தனையில் 3.42 பரப்பளவு சொத்து பொன்னுசாமிக்கு பரிவர்த்தனையில் கொடுக்கப்பட்டுள்ளது. பரிவர்த்தனைக்கு முன்பாக ஏக்கர் 3.42 பரப்பளவு சொத்துதான் திரு.பொங்கலூர் பழனிசாமி மற்றும் அர்ஜுணனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி 3.42 பரப்பளவு சொத்து 1993 ஆம் வருடத்திய 1901 தாராபுரம் சார்பதிவகம் என்ற ஆவணத்தின்படி பொங்கலூர் பழனிசாமிக்கும், அர்ஜுணனுக்கும் பாத்தியப்பட்டதாக Ex.P.63 ஆவணத்தில் பார்வை ஆவணமாக சொல்லப்பட்டுள்ளது. ஆவண எண்.1901/1993 ஆவணத்தின்படி அதில் கண்ட சொத்தின் மதிப்பு என்னவென்றால், நான் மேற்படி ஆவணத்தை பார்க்கவில்லை. பரிவர்த்தனை ஆவணத்தின்படியான மதிப்பினை மட்டுமே நான் கணக்கில் எடுத்துக் கொண்டேன். மேற்படி சொத்துக்கள் கணக்கீட்டுக் காலத்தின்பொழுது/தொடக்கத்தில் இருந்த சொத்து மதிப்பாகும். Ex.P.113 கடிதத்திற்கு எதிரி பொங்கலூர் பழனிசாமி Ex.P.114 பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால், சரிதான். அந்த பதில் அறிவிப்பு 21.5.2012 அன்று கிடைக்கப் பெற்றுள்ளது என்றால் சரிதான். அப்பதில் அறிவிப்பில் இணைப்பாக 6 ஆவணங்களை இணைத்து அனுப்பியுள்ளார் என்றால், சரிதான். அப்பதில் அறிவிப்பில் ரூ.12,94,293/- மீதவருவாய் (Surplus ) இருந்ததாக பட்டியலிட்டுச் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். Ex.P.113 அறிவிப்பில் சொல்லியுள்ள விவரங்கள் பொருந்தாது என Ex.P.114 பதிலில் சொல்லியுள்ளார் என்றால், சரியல்ல. Ex.P.113 விளக்கம்தான் சொல்லியுள்ளார். Ex.P.114 பதில் அறிவிப்பில் Sources of funds with evidences furnished for consideration and necessary adjustment in the statement என்ற தலைப்பில் பட்டியலிட்டுள்ளார் என்றால், சரிதான். அந்தப் பட்டியலில் 4 இனங்களாக பட்டியலிட்டுள்ளார் என்றால், சரிதான்.

மேற்படி 4 இனங்களுக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களையோ அதற்குண்டான நபர்களையோ விசாரித்தேனா என்றால், ஆவணங்களை பரிசீலனை செய்தேன். என்ன, என்ன ஆவணங்களை பரிசீலனை செய்தேன் என்றால், திரு பொங்கலூர் பழனிசாமி கொடுத்த ஆவணங்களைப் படித்துப் பார்த்தேன். Ex.P.114, 3(a) பட்டியலில் 8,07,715/- ரூபாய் பதிவுக் கட்டணம் மற்றும் குறைவு முத்திரை தீர்வை கட்டணம் ஆகியவற்றை விஜயலட்சுமி பொது அறக் கட்டளையிலிருந்து செலுத்தியதாக சொல்லியிருந்தார். அதை நான் ஏற்றுக் கொண்டு, அட்டவணை 4-லிருந்து மேற்கண்ட தொகையை நான் கழித்துள்ளேன். Ex.P.114, 3(c)-ல் கணக்கீட்டுக் காலத்திற்கு பிறகு ரூ.2,29,550/- வருமானவரி செலுத்தியதாக திரு.பொங்கலூர் பழனிசாமி சொல்லியிருந்ததை ஏற்றுக் கொண்டு அத்தொகையை அட்டவணை 4 லிருந்து கழித்துள்ளேன். Ex.P.114-ல் சொல்லியுள்ள இதர கோரிக்கைகளுக்கு ஆவணங்கள் ஏதும் இல்லை. Ex P114 -ல்

1-ல் Cheque issued by M/s. Sakthi Films, No.5, Amarjothi Garden K.P.N.Colony 3rd Street, Thirupur-641 601 (Depot: Priya Complex Gopalapuram,Coimbatore -18) For Rs. 25,00,000/- vide cheque Number 247185 dated 05.10.2007 in favour of N.Palanisamy drawn on ING Vysya Bank, Tiruppur, and the same has been deposited with City Union Bank, Ramnagar Branch, Coimbatore -641 009 in S.B.Account Number 418389 of N.Palanisamy. The cheque was realized on 11.10.2007.

(The amount was returned by M/s.Sakthi Films for the amount of Rs.25,00,000/- received on 22.10.2005 vide cheque number 463717 drawn on IndusInd Bank, Avinashi Road Branch, Coimbatore).

2-ல் Cheque issued by M/s.Sakthi Films, No.5, Amarjothi Garden K.P.N.Colony 3rd Street, Tiruppur-641 601 (Depot : Priya Complex,

Gopalapuram, Coimbatore-18) for Rs.21,55,520(Principal Rs.20,00,000/- plus interest Rs.1,55,520/-) vide cheque number 247186 dated 05.10.2007 in favour of N.Palanisamy drawn on ING Vysya Bank, Tiruppur, and the same has been deposited with City Union Bank, Ramnagar Branch, Coimbatore-641 009 in S.B.Account Number 418389 of N.Palanisamy. The Cheque was realized on 11.10.2007.

(The Amount was returned by M/s.Sakthi Films for the amount of Rs.20,00,000 received on 02.04.2004 vide cheque Number 144205 drawn on ICICI Bank, Coimbatore).

எனச் சொல்லப்பட்டுள்ளது. அதில்,

மேற்படி 1,2 இனம் சேர்த்து ரூ.46,55,520/- அவரது 13.05.2006 முதல் 31.03.2010 காலத்திற்கான check period -ல் திரு.பொங்களூர் பழனிசாமிக்கு வந்த தொகையாக சொல்லியுள்ளார் என்றால், சரிதான். மேற்படி 1,2 இன நடவடிக்கைகள் 1, வைசியா வங்கி, 2,சிட்டி யூனியன் வங்கி, 3. IndusInd Bank,4.சக்தி பிலிம்ஸ் சம்பந்தப்பட்ட பண பரிவர்த்தனை என்றால், எதிரி கொடுத்த விளக்கத்தை நான் பரிசீலனை செய்தேன். அதில் காசோலை எண்.463717 என்பது மேரிஸ் சிமெண்ட் current Account number - 0021-442091-060 என்ற கணக்கிற்கு IndusInd bank அவினாசி ரோட்டில் உள்ள காசோலை ஆகும். அந்த காசோலை எதிரியின் வங்கி கணக்கான கணக்கு எண். 0021-443716-001 யிலிருந்து வழங்கப்பட்ட காசோலை அல்ல. எதிரியானவர், மேரிஸ் சிமெண்ட்டில் 2005 ஆம் வருடத்தில் இயக்குநராக இருந்த போது ரூ.25,00,000/- காசோலையை சக்தி பிலிமிற்கு கொடுத்துள்ளார். அந்த தொகை within the check period க்கு உள்ளாகவே எதிரியானவருக்கு காசோலை எண்.247185 தேதி 05.10.2007 படி மேரிஸ் சிமெண்ட்டின் சிட்டி யூனியன் வங்கி கணக்கு எண். 18121 க்கு 07.01.2008

ஆம் தேதி வரவாகியுள்ளது. ஆதலால் எதிரியின் விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. எதிரி மேற்படி 1-ல் சொல்லியுள்ள சிட்டி யூனியன் பேங்க் எதிரியின் சேமிப்பு கணக்கு எண்.418389-ல் ரூ.25 லட்சம் 11.10.2007-ல் வசூலாகியுள்ளதாக கூறியுள்ளது சம்மந்தமாக மேற்படி வங்கி கணக்கின் விவர அறிக்கையை பார்த்தேனா என்றால், பார்த்தேன். நான் மேலே சொல்லியுள்ளவாறுதான் பரிவர்த்தனைகள் நடந்துள்ளன. எதிரி சொல்வதுபோல் பரிவர்த்தனை எதுவும் நடக்கவில்லை. எதிரி கொடுத்த விளக்கத்தில் சொல்லியுள்ளதுபோல் வங்கி கணக்கு எண்.418389-ல் 11.10.2007-ல் பரிவர்த்தனை ஏதும் நடக்கவில்லை. மேற்படி வங்கிகளான வைசியாள் வங்கி, திருப்பூர் மற்றும் சிட்டியூனியன் பேங்க், ராம்நகர் ஆகிய வங்கிகளில் எதிரி பொங்கலூர் பழனிசாமி வங்கி கணக்கு அறிக்கைகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது Ex.P.77 மற்றும் Ex.P.78 ஆகும்.

கேள்வி - 11.10.2007 ஆம் தேதியில் எதிரியின் சிட்டி யூனியன், ராம்நகர், கோவை கிளை வங்கிக் கணக்கு எண்.418389-ல் ரூ.25 லட்சம், சக்தி பிலிம்ஸின் வைசியாள் வங்கியின் காசோலை எண். 247185, 05-10-2007 தேதியிட்டு திரு.பொங்கலூர் பழனிசாமி கணக்கில் வசூலாகியுள்ளது, அந்த பணம் மீண்டும் 22.10.2005 ஆம் தேதியில் சக்தி பிலிம்ஸ்ஸுக்கு காசோலை எண்.463717, IndusInd Bank, அவினாசி ரோடு கிளையின் மூலமாக செலுத்தப்பட்டுள்ளது என்றும், அது குறித்து நான் சரியாக விசாரிக்கவில்லை என்றால்,

பதில் - சரியல்ல. எதிரியின் சிட்டி யூனியன், ராம்நகர், கோவை கிளை வங்கிக் கணக்கு எண்.418389 எண் குறித்த கணக்கு விவர அறிக்கையை எடுத்துப் பார்த்ததில் 11.10.2007 ஆம் தேதி ரூ.101/- செலுத்தி மேற்கண்ட வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் ரூ.25 லட்சம் வைப்பீடு செய்ததற்கான நடவடிக்கைகள் ஏதும் காணப்படவில்லை. மேலும், நான் ஏற்கனவே சொல்லியுள்ளபடி அந்த ரூ.25 லட்சம் காசோலை எண்.247185-ன்படி திரும்பவும் மேரீஸ் சிமெண்ட் வங்கிக் கணக்கான 18121 அக்கவுண்ட்டிற்கு 7.1.2008 ஆம் தேதி அந்த கணக்கீட்டுக் காலத்திற்குள்ளாகவே செலுத்தப்பட்டது. இது சம்மந்தமாக அந்த வங்கி கணக்கின் மேலாளரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளேன். மேலும் IndusInd வங்கியின் கணக்கில் சக்தி பிலிம்ஸ் கொடுத்த காசோலை செலுத்தப்படவில்லை.

கேள்வி - 11.10.2007 ஆம் தேதியில் காசோலை எண்.247186, தேதி 5.10.2007 சக்தி பிலிம்ஸ், வைசியாள் வங்கி, திருப்பூர் காசோலை ரூ.21,55,520/- எதிரிக்கு வழங்கப்பட்டு அந்த காசோலை கோயமுத்தூர், ராம்நகர் கிளை, சிட்டியூனியன் வங்கியில் உள்ள எதிரியின் சேமிப்பு கணக்கு எண்.418389-ல், 11.10.2007-ல் காசாக்கப்பட்டுள்ளது. அந்த தொகை மீண்டும் 2.4.2004 ஆம் தேதியிட்ட ரூ.20 லட்சத்திற்கான காசோலை எண்.144205-ன்படி ICICI வங்கி, கோயமுத்தூர் வழி செலுத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி இரண்டு காசோலைகளும், இரண்டு காசோலைகளின் கூட்டுத் தொகை ரூ.46,55,520/- எதிரி பொங்கலூர் பழனிசாமியின் சேமிப்பு கணக்கு எண்.418389, சிட்டியூனியன் பேங்க், ராம்நகர் கிளையில் வரவாகியுள்ளது என்றும், அது Ex.P.77 வரிசையில் 11.10.2007 தேதியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அந்தத் தொகையைத்தான் எதிரியானவர் விளக்கம் Ex.P.114, 1,2 -ல் சொல்லியுள்ளார் என்றும், 11.10.2007 ஆம் தேதியில் மேற்படி வங்கிக் கணக்கில் ரொக்கமாக வரவாகியுள்ள ரூ.101/-ஐ மட்டும் கணக்கில் எடுத்துள்ளேன் என்றும், காசோலை மூலம் வரவானதை கணக்கில் எடுக்கவில்லை.

பதில் - சரியல்ல. மேற்கண்ட கேள்விக்கான விளக்கத்தை என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் விரிவாக விளக்கியுள்ளேன்.

Ex.P.114 -ல் இணைப்பு 3 ஆவணமாக எதிரியின் சிட்டியூனியன் வங்கி கணக்கின் அறிக்கையை அளித்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி இணைப்பில் இணைக்கப்பட்டுள்ள கணக்கு விவர அறிக்கையும், Ex.P.77 வரிசை கணக்கு விவர அறிக்கையும் ஒரே கணக்கு விவர அறிக்கையா என்றால், அந்த கணக்கிற்கான கணக்கு விவர அறிக்கையை நான் வாங்கி Ex.P.77 வரிசையாக தாக்கல் செய்துள்ளேன். எதிரி Ex.P.114, 1,2 -ன்வழி சரியான விளக்கத்தை அளித்துள்ளார் என்றும், நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் நிராகரித்துள்ளேன் என்றால், சரியல்ல. ரூ.46,55,520/- என்பது மேரீஸ் சிமெண்ட்ஸ் அக்கவுண்டிலிருந்து 418389 என்ற வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்பட்ட தொகையாகும். மேலே சொல்வதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். அதை தற்பொழுது என்னால் உடனடியாக தேடி எடுக்க இயலவில்லை. அது காசோலை மூலம் வரவான தொகையல்ல. மேரீஸ் சிமெண்ட் வங்கி கணக்கிலிருந்து

செலுத்தப்பட்ட தொகை என்றும், அது காசோலை மூலம் வரவான தொகை அல்ல என்றும் நான் சொல்வது தவறு என்றால், சரியல்ல. மேரீஸ் சிமெண்ட்டின் யார் யார் இயக்குநர்கள் என்றால், திரு.பொங்களூர் பழனிசாமி இயக்குநர்களில் ஒருவராவார். திருமதி. வித்யா கோகுல், திரு.சூர்யா, திருமதி.விஜயலட்சுமி(எதிரியின் மனைவி),திரு.அர்ஜுனன்(எதிரியின் சகோதரர்), திரு.பைந்தமிழ்பாரி(எதிரியின் மகன்), திருமதி.இந்து முருகேசன்(எதிரியின் மகள்) ஆவார்கள். மேற்படி நபர்கள் கூடுதல் இயக்குநர்கள் ஆவார்கள். திருமதி.வித்யா கோகுல், திரு.சூர்யா ஆகியோர்கள் திரு.அர்ஜுனனின் மகளும், மகனும் ஆவார்கள். மேரீஸ் சிமெண்ட் கம்பெனியின் மேஜர் ஷேர் ஹோல்டர்கள் யார் என்றால், திரு.பொங்களூர் பழனிசாமி ஆவார். ஆவார் 26,664 Class A equity shares கொண்டுள்ளார். மேலும் 7969 Class B equity shares ஐ கொண்டுள்ளார். இது தவிர எதிரியின் மனைவி விஜயலட்சுமியின் பெயரில் 990 class A equity shares, 651 class B equity shares ஐ கொண்டுள்ளார். Check period -ல் மேரீஸ் சிமெண்ட்டின் கம்பெனியின் வருமானத்தை கணக்கில் எடுத்துக்கொண்டேனா என்றால், இல்லை. மேற்படி நிறுவனத்தில் எதிரி கொண்டுள்ள பங்குகளை எதிரியின் சொத்தாக கணக்கில் எடுத்துக்கொண்டேன். மேரீஸ் சிமெண்ட் நிறுவனத்தின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு கம்பெனி பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான வருமான வரி செலுத்தப்பட்டு வந்தது என்றால், சரிதான். ExP114 , 3b யில் எதிரி கொடுத்த விளக்கத்தை நிராகரிப்பதற்கு என்ன என்ன ஆவணங்களை பரிசீலனை செய்தேன், யார் யாரை விசாரணை செய்தேன் என்றால், எதிரி குடியிருந்த வீடு எதிரியின் மாமியார் பொன்னம்மாள் பெயரில் இருந்தது. எதிரி அந்த வீட்டிற்கு குடிநீர் வரி செலுத்தியதை ஒப்புக்கொள்கிறார். ஆனால் வீட்டு வரி செலுத்தியது எதிரியின் மாமியார் பொன்னம்மாள் என எதிரி சொன்னதை ஏற்கமுடியவில்லை.

எதிரியின் மாமியாரின் வயதை பொறுத்தும் அவர், விவசாயம் செய்து சம்பாதித்து வீட்டு வரி கட்டினார் என சொன்னதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. எந்த விதமான ஆவணங்களையும் பார்க்காமால், எந்தவிதமான சாட்சிகளையும் விசாரக்கமாமல், எதிரி கொடுத்த விளக்கத்தை நிராகரித்தது தவறு என்றால், சரியல்ல. எதிரியின் மாமியார் பெயரில் தான் வரிவிதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும், அதை எதிரியின் மாமியாரால் தான் செலுத்த முடியும் என்றால், சரியல்ல. ExP114. 3C - யில் கண்டுள்ள விளக்கத்தை நான் நிராகரித்தற்கு முகாந்திரம் ஏதும் இல்லை என்றால், சரியல்ல. நான் உரிய ஆவணங்களை பார்க்காமாலும், சாட்சிகளை விசாரிக்கமாலும், தன்னிச்சையாக 3C யில் கொடுத்துள்ள விளக்கத்தை நிராகரித்துள்ளேன் என்றால், சரியல்ல. ExP114, 4-ல் கண்டுள்ள விளக்கத்தை எந்த அடிப்படையில் நான் நிராகரித்துள்ளேன் என்றால், விஜயா மினரல்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் என்பது 100% ஏற்றுமதி நிறுவனமாகும். மேற்படி கம்பெனி குறித்து விசாரித்தபோது, அந்த நிறுவனம் ஆரம்பித்த நாளிலிருந்து எந்த ஒரு செயல்பாடுகளும் இல்லாமல் இருந்தது. மேற்படி நிறுவனம் குறித்து அறிக்கைகள் எதுவும் கம்பெனி சட்டத்தின் படியான பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. வருவான வரித்துறையிடமும் சமர்ப்பிக்கபடவில்லை. எதிரி சொல்லும் காசோலை எண்.354907 காசோலையில் ரூ.10,00,000/- விஜயா மினரல் நடப்பு கணக்கு எண்.18132 யிருந்து 01.07.2006 ஆம் தேதி தொகை எடுக்கப்பட்டுள்ளது. அதே நாளில் மேற்படி தொகை மேரீஸ் சிமெண்ட் அக்கவுண்ட எண்.18121 என்ற வங்கி கணக்கில்சரிசெய்யப்பட்டுள்ளது Adjust ஆகி உள்ளது. ஆதலால், எதிரியின் விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. விஜயா மினரல்ஸ் அண்ட் எக்ஸ்போர்ட் என்பது ஒரு கூட்டாண்மை நிறுவனம் என்றால், அது குறித்து எனக்கு நினைவு இல்லை. அதில் யார் யார் பங்குதாரர்கள் தெரியுமா என்றால், ஞாபகமில்லை. ExP113 -ல் நான் விஜயா மினரல்ஸ் எக்ஸ்போர்ட் குறித்து எதுவும்

சொல்லவில்லை. மேற்படி நிறுவனம் குறித்து நான் விசாரித்துள்ளேனா என்றால் கம்பெனி பதிவாளரிடம் விசாரித்தேன்.மேற்படி நிறுவனம் ஆரம்பித்த நாளிலிருந்தே எவ்வித செயல்பாடும் இல்லாமல் கம்பெனி பதிவாளரிடம் எவ்வித அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படாமல் வருமானவரி கணக்கும் தாக்கல் செய்யப்படாமல் இருப்பதாக தெரிந்து கொண்டேன். கம்பெனி பதிவாளரிடம் ஆவணம் ஏதும் வாங்கினேனா என்றால், இல்லை, அவரிடம் விசாரித்து வாக்கு மூலம் பெற்றுள்ளேன். விஜயா மினரல் எக்ஸ்போர்ட்டின் வங்கி கணக்கான 18132-வில் கணக்கு விவர அறிக்கையை வங்கியிலிருந்து பெற்று, அதை ஆய்வு செய்தபோது 1.7.2006 ஆம் தேதி 354907 என்ற காசோலை மூலமாக ரூ.10 லட்சம் பணமாக எடுக்கப்பட்டுள்ளது. 30.6.2006 ஆம் தேதி விஜயா மினரல்ஸ் அண்ட் எக்ஸ்போர்ட்ஸ் கணக்கில் ரூ.10 லட்சம் கிரிடிட் ஆகி உள்ளது என்றால் சரியல்ல. 1.7.2006 ஆம் தேதி ரூ.10 லட்சம் Debit ஆகி உள்ளது. எதிரி சொல்லும் காசோலை மூலமாகத்தான் Debit ஆகியுள்ளது.30.6.2006 ஆம் தேதி விஜயா மினரல்ஸ் அண்ட் எக்ஸ்போர்ட்ஸ் கணக்கில் ரூ.10 லட்சம் கிரிடிட் ஆகியுள்ளது என்றால் கணக்கு விவர அறிக்கையின்படி தவறாகும். Ex.P.114 பதில் விளக்கத்திற்கு பிறகு எதிரியையோ அல்லது எதிரியின் ஆடிட்டரையோ அழைத்து வாக்கு மூலம் பதிவு செய்தேனா என்றால், எதிரியை அழைத்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். அவருடைய ஆடிட்டரை அழைத்து வாக்கு மூலம் பதிவு செய்ததாக நினைவில்லை. Ex.P.114 இணைப்பில் சக்தி பிலிம்ஸ்ஸின் Ledger Extract இரண்டு ஆவணங்களாக இணைக்கப்பட்டுள்ளது. அது குறித்து ஆவணங்களை பரிசீலனை செய்தேன். சக்தி பிரிம்ஸ் தொடர்புடைய யாரையும் விசாரிக்கவில்லை. சக்தி பிலிம்ஸ்ஸிற்குச் சென்று ஆவணங்களைப் பார்த்தேனா என்றால், இல்லை. Ex.P.114-க்குப் பிறகு Basic Statement மாற்றி அமைத்தேன். அவ்வாறு மாற்றி அமைத்தது குறித்து எதிரிக்கு தெரிவித்தேனா என்றால், சட்டப்படி அவ்வாறு

தெரிவிக்கவேண்டியது இல்லை. எதிரி வருமானத்திற்கு அதிகமாக சொத்து ஏதும் சேர்க்கவில்லை என்பதை தெரிந்தே நான் வேண்டுமென்றே சில ஆவணங்களை கருத்தில் கொள்ளாமல் தவிர்த்திருக்கிறேன் என்றால் சரியல்ல. PW.36 சிட்டியூனியன் வங்கி மேலாளரை நான் முழுமையாக விசாரிக்காமல் சில தகவல்களை மட்டும் அவரிடமிருந்து சேகரித்துள்ளேன் என்றால், சரியல்ல. Ex.P.77 மற்றும் Ex.P.78 வரிசையில் முழுமையான கணக்கு விவரங்களை நான் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி அவரது சொத்திற்கும், வருமானத்திற்கும் உரிய கணக்குகளை காட்டி வருமான வரி செலுத்தி வந்துள்ளார் என்றாலும், அவர் பங்குதாரராக, இயக்குனராக உள்ள நிறுவனங்களுக்கும் உரிய வருமானவரி செலுத்தி வந்துள்ளார் என்றால், எதிரி செலுத்திய வருமானவரி குறித்த விவரங்களை நான் கணக்கில் எடுத்துள்ளேன். 2006 மற்றும் 2011 சட்டமன்ற தேர்தல்களில் எதிரி தாக்கல் செய்த வேட்பு மனுக்களில் சொத்து சம்மந்தமான எந்தவிதமான ஆவணங்களையும் வேட்பு மனுக்களோடு இணைக்கவில்லை என்றால், சரிதான். வேட்பு மனுக்களில் சொத்து குறித்த விவரங்களை குறிப்பிட்டுள்ளார். வேட்பு மனுக்களில் எதிரி குறிப்பிட்டிருந்த சொத்து குறித்த அனைத்து ஆவணங்களையும் பெற்று, பரிசீலனை செய்தேனா என்றால், ஆம், செய்தேன். அனைத்து ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இவ்வழக்கில் தேவையான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தேவையில்லாத ஆவணங்கள் எது, எது என்றால் அது குறித்து தற்பொழுது எனக்கு சரியாக நினைவில் இல்லை. இவ்வழக்கில் சாட்சிகளிடம் நான் வாக்கு மூலம் பதிவு செய்திருக்கிறேன். PW1 அம்பிகாபதி எனது விசாரணையில் பார்வை மகசரும், வீடு சோதனை ஒன்றும் தயார் செய்தேன் என்று சொல்லியுள்ளாரா என்றால், ஆம் சொல்லியுள்ளார். PW2 ராசு, PW3 மாணிக்கம் ஆகியோர்கள் எனது விசாரணையில் பார்வை மகசரும், வீடு சோதனை பட்டியல் ஒன்றும் தயார் செய்தார்கள் என சொல்லியுள்ளார்களா என்றால், ஆம்,

சொல்லியுள்ளார். ஆனால் பார்வை மகசர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சோதனை பட்டியல் இணைத்துள்ளேன். சோதனை பட்டியலிலேயே அது பார்வை மகசர் உள்ளடக்கியுள்ளது. தனியாக பார்வை மகசர் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகசர் தயாரித்து கொடுக்கப்பட்டதாக PW.1 முதல் PW.3 சான்றுரைஞர்கள் சொல்வது தவறு என்றால் சரியல்ல. PW.4 ராமச்சந்திரன், PW.5 அரங்கராஜன், PW.6 ராஜாமணி சோதனை செய்த இடத்தில் பார்வை மகசர் தயார் செய்ததாகவும், அதை என்னிடம் கொடுத்ததாகவும் எனது விசாரணையில் தெரிவித்துள்ளார்கள் என்றால், சரிதான். ஆனால் அந்த பார்வை மகசர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. சோதனை பட்டியலிலேயே பார்வை மகசரும் உள்ளடக்கியுள்ளது. PW.7 பழனிக்குமார், PW.8 சிவக்குமார், PW.9 பாலசுப்பிரமணியன் ஆகியோர்கள் சோதனை செய்த இடத்தில் பார்வை மகசர் தயார் செய்ததாகவும், அதை என்னிடம் கொடுத்ததாகவும் சொல்லியுள்ளார்கள் என்றால், சரிதான். ஆனால் அந்த பார்வை மகசர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சோதனை பட்டியிலேயே பார்வை மகசரும் உள்ளடக்கியுள்ளது. PW.13 திரு.நாச்சியப்பன், PW.14 தியாகு, PW.15 சோபனா ஆகியோர்கள் சோதனை செய்த இடத்தில் பார்வை மகசர் தயாரித்ததாகவும், அவைகளை என்னிடம் கொடுத்ததாகவும் எனது விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால், சரிதான். நான் எனது புலன் விசாரணையில் அரசு அதிகாரிகள் மற்றும் காவல் துறை அதிகாரிகளை மட்டும்தான் புலனாய்விற்கு துணையாக பயன்படுத்தியுள்ளேன் என்றால், சரியல்ல. குற்ற விசாரணை நடைமுறைச் சட்டப்படி சோதனையின்பொழுது தனிநபர் சாட்சிகள், சோதனை செய்யும் இடத்து அருகில் வசிக்கும் மதிப்புமிகு நபர்கள் எவரையும் நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள சோதனை தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் சட்டவிரோதமானது என்றால் சரியல்ல. நானே முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்து, நானே இவ்வழக்கினை புலனாய்வு செய்து, நானே இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பது சட்டவிரோதமானது என்றாலும், சட்டப்படி ஏற்க முடியாது என்றாலும் சரியல்ல. உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற தீர்ப்புகளின்படி ஏற்க முடியாது என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த Ex.P.114 விளக்கத்தினை ஏற்று, இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யாமல் எதிரியை விடுவித்து வழக்கை முடித்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. எதிரி ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி எவ்வித குற்றமும் செய்யவில்லை என்றாலும், எதிரி நிரபராதி என்றாலும் சரியல்ல. 2011 ஆம் வருடம் திராவிட முன்னேற்ற கழகத்தின் ஆட்சி மாற்றப்பட்டு, அனைத்து இந்திய அண்ணாதிராவிட கழகத்தின் தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தவுடன் அப்போதைய முதலமைச்சர் காவல் துறையின் அமைச்சராகவும் இருந்ததால், தி.மு.க. கட்சியின் எதிரியைப் போன்ற முக்கிய பிரமுகர்களின்மீது வழக்கு பதிவு செய்யப்படவேண்டும் என்ற கட்டாயத்தின் அடிப்படையில் இந்த வழக்கை பொய்யான புகாரின் அடிப்படையில் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட சூழ்நிலையில் இவ்வழக்கில் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த அடிப்படையில் எதிரி வருமானத்திற்கு அதிகமாக ரூ.44,64,387.19 சொத்து சேர்த்திருப்பதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரி சட்டத்திற்கு உட்பட்ட முறையில் சொத்துக்களை சேர்த்துள்ளார் என்றும், முறையான கணக்குவழக்குகளை சமர்ப்பித்து வந்துள்ளார் என்றாலும், எதிரி முன்னால் அமைச்சர் என்பதால் அவரை இழிவுபடுத்துகிற வகையில் அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக எதிரியின்மீது இவ்வழக்கு பொய்யாக புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வேறு வழியில்லாமல் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை அனுமதியுடன்</u>

Ex.P.77 -ல் 11.10.2007 ஆம் தேதியில் S.CRS எனக் குறிப்பிடப்பட்டிருப்பது Sundry creditors என்பதைக் குறிப்பதாகும். காசோலை மூலம் செய்த நடவடிக்கைகளில் காசோலை எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>குறுக்கு விசாரணை</u>

கேள்வி - 11.10.2007 ஆம் தேதியில் எதிரியின் கணக்கில் ரூ.46,55,520/- Credit ஆகியிருக்கிறது மற்றும் ஏற்கனவே உள்ள கிரிடிட் ரூ.101/- உடன் சேர்ந்து கணக்கிடப்பட்டுள்ளது.

பதில் - சரிதான். அது Sundry creditors மூலம் Credit ஆன தொகையாகும். காசோலை மூலமாக கிரிடிட் ஆன தொகை அல்ல.

கேள்வி - இரண்டு காசோலைகள் மூலம் வந்த கூட்டுத் தொகையே ரூ.46,55,520/-தைத்தான் S.CRS என குறிப்பிட்டுள்ளார்கள் என்றால்,

பதில் - தவறாகும்.

வழக்கிற்காக வேண்டி மேற்படி ரூ.46,55,520/- ஐ காசோலை மூலமாக கிரிடிட் ஆன தொகை அல்ல என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம் இரவு 7.25 மணி.

ஒம்/சண்முகபிரியா,

ஒம்/ஆர்.சக்திவேல்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.